செ.வெ.எண். 18/டிசம்பர் தேதி : 16.12.2016

**<u>தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>**



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சிமொழித் திட்டத்தில் 2014-ம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட நிலை அலுவலகத்திற்குக் கேடயமும் மற்றும் தமிழில் வரைவுகளையும், குறிப்புகளையும் சரியாக செய்த இளநிலை உதவியாளர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களையும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர் அவர்கள் வழங்கினார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலகங்களிலும் முற்றிலுமாகத் தமிழையே பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத் தமிழ் வளர்ச்சித் துறை அரசு அலுவலர்களுக்கு இரண்டு நாள் பயிலரங்கத்தைத் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கியுள்ளது.

தொடக்க நிகழ்ச்சியில் மாவட்ட தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.ரே. வெங்கடாசலம் அவர்கள் தமது வரவேற்புரையில் அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் அலுவலக நடைமுறைகளில் தமிழை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நூறு விழுக்காடு நடைமுறைப்படுத்த வேண்டியது நமது கடமையாகும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தமிழ் வளர்ச்சித் துறையின் கோவை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் முனைவர் ப.அன்புச்செழியன் அவர்கள் பயிலரங்கத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். தூத்துக்குடி மாவட்டத் தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் முனைவர் க. சிவசாமி, திருச்சிராப்பள்ளி மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் முனைவர் துரை. தம்புசாமி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

15.12.2016 அன்று முற்பகல் பயிலரங்க நிகழ்வில் திண்டுக்கல் திரு.மா. தமிழ்ப்பெரியசாமி, புலவர் வெற்றியழகன், புலவர் ப. ஆறுமுகம் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் (பணிநிறைவு) சேலம் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

பயிலரங்கத்தைத் தொடர்ந்து மாலையில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. தருமபுரி மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.ரே. வெங்கடாகலம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். **மாவட்ட வருவாய் அலுவலர் திரு அ.சங்கர் அவர்கள் 2014-ஆம் ஆண்டில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய மாவட்ட நிலை அலுவலகத்திற்கான பரிசினை தருமபுரி, பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும், தமிழில் சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதிய அரசுப் பணியாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்புரையாற்றினார்.** அவர் தமது உரையில், அரசு அலுவலர்கள் அனைத்து செயல்பாடுகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும். அரசின் சட்டத்தையும் அரசு ஆணைகளையும் மதித்துப் பின்பற்ற வேண்டும். தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும். அதற்காக இது போன்ற

பயிலரங்குகளை அரசுப் பணியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். மாவட்டக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் அ.சுப்பையா பாண்டி, மாவட்டக் கல்வி அலுவலர் திரு.சி. இராசசேகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா. சண்முகசுந்தரம் அவர்கள் நன்றியுரை கூறினார். இப்பயிற்சி அரங்கத்தில் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பாக பயிற்சி பெற்றனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.